# LOYOLA COLLEGE (AUTONOMOUS), CHENNAI – 600 034

**B.A.** DEGREE EXAMINATION - **TAMIL LITERATURE**

THIRD SEMESTER – NOVEMBER 2015

**TL 3501/TL 4500 - NANNOL - I (PAAYIRAMUM EZHUTHUM)**

Date : 04/11/2015 Dept. No. Max. : 100 Marks

Time : 09:00-12:00

**பகுதி - அ**

**எல்லா வினாக்களுக்கும் 20 சொற்களில் விடையளிக்க.** ( 10 x 2 = 20 )

01. பாயிரத்தின் வேறு பெயர்களைக் குறிப்பிடுக.
02. நூலில் இடம்பெற வேண்டிய பத்துவகை அழகுகள் யாவை?
03. சார்பெழுத்துகள் எத்தனை வகைப்படும்? நான்கின் பெயர்களைக் கூறுக.
04. மாத்திரையின் இலக்கணமாவது யாது? எழுத்தின் மாத்திரை எவ்வெவ்விடங்களில் அளவு கடந்து ஒலிக்கும்?
05. பகுபதம், பகாப்பதம் – விளக்கம் கூறுக.
06. தமிழின் சிறப்பெழுத்துகளாகப் பவணந்தியார் கூறுவன யாவை?
07. 'விகாரப் புணர்ச்சி' விளக்கம் தருக.
08. 'உயிர்வரின் உடம்படுமெய்யென்றாகும்' – விளக்குக.
09. மெய்யீற்றின் முன் 'யரழ' புணருமாற்றை எழுதுக.
10. பொதுச் சாரியைகளாகப் பவணந்தியார் குறிப்பிடுவன யாவை?

**பகுதி - ஆ**

**எவையேனும் ஐந்தனுக்கு ஒன்றரைப் பக்க அளவில் விடையளிக்க.** ( 5 x 7 = 35 )

11. காண்டிகையுரை, விருத்தியுரை ஆகியவை குறித்த செய்திகளைத் தொகுத்துரைக்க.
12. முதலெழுத்துகளின் முயற்சி, பிறப்பு குறித்து எழுதுக.
13. காலம் காட்டும் இடைநிலைகளைச் சான்றுகளுடன் விளக்குக.
14. அகர வீற்றுச் சிறப்பு விதி நன்னூலில் எங்ஙனம் கூறப்பட்டுள்ளது?
15. மெய்யீற்றின் முன் உயிரும் மெய்யும் மயங்குமாற்றை எழுதுக.
16. பவணந்தியார் உருபு புணரியிலில் எவ்வெவற்றிற்குப் புறனடை கூறியுள்ளார்?
17. மாணாக்கர் எத்தனை வகைப்படுவர்? நன்னூல் வழி விளக்குக.

**பகுதி - இ**

**மூன்று பக்க அளவில் விடையளிக்க.** ( 3 x 15 = 45 )

18. நல்லாசிரியர் பாடம் சொல்லும் முறையும் மாணவர் பாடம் கேட்டலின் வரலாறும் நன்னூலில் எங்ஙனம் எடுத் துரைக்கப்பட்டுள்ளது?

    **( அல்லது )**

    எழுத்திலக்கணத்தின் பகுதிகள் யாவை? இவற்றுள் மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள், இறுதியில் வரும் எழுத்துகள் ஆகியவற்றை அடையாளப்படுத்தி விளக்குக.

19. பகுதி, விகுதி இவற்றுக்குரிய இலக்கணம் கூறி, அவை பற்றிய செய்திகளை விளக்குக.

    **( அல்லது )**

    குற்றுகர சிறப்பு விதி குறித்த செய்திகளைப் பவணந்தியார் உயிரீற்றுப் புணரியலில் எங்ஙனம் எடுத்துரைத்துள்ளார்?

20. லகர, ளகர, வகர ஈற்றுப்புணர்ச்சி விதிகளைச் சான்றுகளுடன் கூறுக.

    **( அல்லது )**

    உருபு புணரியலில் பவணந்தியார் குறிப்பிட்டுள்ள செய்திகளைத் தொகுத்துரைக்க.

**********